# ஆஸ்திரேலியாவின் கவர்னர் ஜெனரலுடன் பிரதமர் சந்திப்பு

மே 24, 2023

பிரதமர் திரு நரேந்திர மோடி, ஆஸ்திரேலியாவின் கவர்னர் ஜெனரல் திரு டேவிட் ஹர்லியை 24 மே 2023 அன்று ஆஸ்திரேலியாவின் சிட்னியில் உள்ள அட்மிரால்டி ஹவுஸில் சந்தித்தார்.

2. நியூ சவுத் வேல்ஸ் கவர்னராக 2019ல் இந்தியாவிற்கு விஜயம் செய்த போது, கவர்னர் ஜெனரலுடனான சந்திப்பை பிரதமர் நினைவு கூர்ந்தார்.

3. நீண்ட கால இருதரப்பு கூட்டுறவை வலுப்படுத்துவதற்கான வழிகள் குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர்.

4. ஆஸ்திரேலியாவில் இந்திய சமூகத்தின் நேர்மறையான பங்களிப்புகளையும், இரு நாடுகளுக்கும் இடையே நெருக்கமான தொடர்புகளை வளர்ப்பதில் அவர்களின் பங்கையும் பிரதமர் நினைவு கூர்ந்தார்.

**சிட்னி**
**மே 24, 2023**